DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI.

# OS . No. 7/2016

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. மாதவன் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | சங்கரலிங்கம் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2024.

(சாட்சி அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டார்)
சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்

**5, 10, 15 முதல் 20, 22 முதல் 25, 29, 31 முதல் 34 பி.வா.கு.வி தொடர்ச்சி:**

| | | |
|---|---|---|
| கேள்வி | : | நீங்கள் தாக்கல் செய்த வாசாஆ1ல் கூறபட்ட விபரங்கள் அனைத்தும் சரிதான் என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | வாசாஆ1ன் அடிப்படையில் தான் தாவா சொத்தில் நீங்கள் பாகம் கேட்டுள்ளீர்கள் என்றால்? |
| பதில் | : | ஆமாம். |
| கேள்வி | : | வாசாஆ1ல் தாவா சொத்து எந்த ஷெட்யூலில் , எத்தனாவது இலக்கமாக காட்டப்பட்டுள்ளது என்றால் ? |
| பதில் | : | A மற்றும் B செட்யூலில், 2 வது இலக்கமாக காட்டப்பட்டுள்ளது. |
| கேள்வி | : | A மற்றும் B செட்யூலில், 2 வது இலக்கமாக காட்டப்பட்டுள்ளது கிணறு மற்றும் நிலமா என்றால்? |
| பதில் | : | கிணறு மற்றும் நிலமும் சேர்ந்தது. |
| கேள்வி | : | 9 ல் 2 பாகம் என்பது எதை குறித்து என்றால்? |
| பதில் | : | கிணறும் , நிலமும் குறித்து. |

| | | |
|---|---|---|
| | | .2. |
| கேள்வி | : | மேற்படி 2 வது இலக்க சொத்தில் மேல்புறம் உள்ள கிணறு , தண்ணீர் , கமலை , வாரி , வாய்க்கால் , வழிநடை , விருட்சக ஜாதி, சரளை மேடு வகையறாவிலும் மேற்படி கிணற்றில் ஸ்தாபித்திற்கும், SC 20 ம் நம்பர் 5 HP மின் மோட்டார் பம்பு செட் ரூம் வகையறாக்களிலும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது கிணறு , மின் மோட்டார் , மின் இணைப்பு தொடர்பானது மட்டும் என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | அதே மாதிரி 393/7 ல் 3 வது இலக்க சொத்தாக என்ன விபரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் ? |
| பதில் | : | 393/7 ல் கிணறு விஸ்தீரணம் 12 செண்டாக சொல்லப்பட்டுள்ளது. |
| கேள்வி | : | மேற்படி கிணற்றில் உங்களுடைய சொத்திற்கு எவ்வளவு பாகம் காட்டப்பட்டுள்ளது என்றால்? |
| பதில் | : | கிணற்றில் பாதி பாகம் காட்டப்பட்டுள்ளது. |
| கேள்வி | : | பாதி பாகம் என்றால் 9 ல் 4.5 பாகம் என்றால்? |
| பதில் | : | 6 செண்ட் எனக்கு சொந்தம். |
| கேள்வி | : | மேற்படி 2 இலக்க சொத்துக்களிலும் 9 ல் 2 பாகம் நீங்கலாக என குறிப்பிடப்பட்டுள்ளது எதை பொறுத்து என்றால்? |
| பதில் | : | பொது கடனுக்காக மேற்படி சொத்து பிரிவினை ஏற்படுத்தாமல் உள்ளது என குறிப்பிடப்படுகிறது. |
| கேள்வி | : | வாசாஆ 2 ல் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை நீங்கள் ஏற்று கொள்கீறிர்களா என்றால்? |
| பதில் | : | ஏற்றுக் கொள்கிறேன். |
| கேள்வி | : | வாசாஆ 2 ல் சொத்து விபரமாக உங்களுக்கு எவ்வளவு பாகம் என்று கூறப்பட்டுள்ளது என்றால்? |
| பதில் | : | மொத்த சொத்தில் 9 ல் 3.5 பாகம் என்று கூறப்பட்டுள்ளது. |
| கேள்வி | : | வாசாஆ 2 ல் உள்ள சொத்து விபரத்தில் கிணற்றை பற்றி தான் பாகம் கேட்கபட்டுள்ளது தவிர 393/3 ல் பாகம் கேட்கபடவில்லை என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | நீங்கள் படித்தவர் , நீங்கள் போட்ட ஆவண விபரங்களை பற்றி தெரிந்து கொண்டே அதற்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால் ? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | வாசாஆ 2 ல் சொல்லப்பட்டுள்ள சொத்தின் விபரம் சரியா என்றால்? |
| பதில் | : | சரிதான். |

| | | |
|---|---|---|
| | |  |
| கேள்வி | : | வாசாஆ 2ன் அடிப்படையில் தாவா சொத்தில் உங்களுக்கு எந்த விதமான உரிமையோ, பாத்தியமோ , அனுபவமோ இல்லை என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | வாசாஆ 1ல் A மற்றும் பி செட்யூலானது கடன் விபரங்கள் துல்லியமாக கூறப்பட்டுள்ளதா என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | மேற்படி கடன் தொகைகளும் ஏ மற்றும் பி செட்டியூல் தரப்பிற்கு தனித்தனியே குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளதா என்றால்? |
| பதில் | : | கூறப்பட்டுள்ளது. |
| கேள்வி | : | வழக்குரையில் பொது கடனுக்காக தாவா சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது வாசாஆ 1ல் எந்த இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்? |
| பதில் | : | அவ்வாறு வாசாஆ 1ல் எதுவும் குறிப்பிடப்படவில்லை. |
| கேள்வி | : | உங்களுக்கு உயிர் சொந்தம், பொருள் சொந்தம் என்பதற்கு அரத்தம் தெரியுமா ? |
| பதில் | : | தெரியும். |
| கேள்வி | : | பாகப்பிரிவினையில் இது முதல் நம்மில் ஒருவர் அடையும் பாக சொத்துக்களை பொறுத்தும் கட்டி தீர்த்து கொள்ள வேண்டிய கடன்களை பொறுத்தும் மற்ற நபருக்கு எவ்வித பாத்தியமும் பின் தொடர்ச்சி இல்லை என்றும் இது முதல் நமக்குள் உயிர் சொந்தம் தவிர பொருள் சொந்தம் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது சரியா , தவறா ? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | அவ்வாறு குறிப்பட்டுள்ளதன் பேரில் பாகப்பிரிவினைக்கு பிறகு பிரிக்க வேண்டிய சொத்துக்கள் ஏதும் இல்லை என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | 393/3 சொத்து பொது கடனுக்காக நிறுத்தி வைக்கபட்டுள்ளது என பாகப்பிரிவினையில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால்? |
| பதில் | : | இல்லை. |
| கேள்வி | : | சர்வே எண் 394/1ல் மொத்தம் விஸ்தீரணம் எவ்வளவு என்றால்? |
| பதில் | : | 7 ஏக்கர் 6 செண்ட். |
| கேள்வி | : | மேற்படி 7 ஏக்கர் 6 செண்ட் கிழக்கு பக்கம் ஏ செட்யூல் பாகமாகும், மேற்கு பக்கம் உங்கள் தந்தை பி செட்யூல் பாகமாகும் என்றால்? |
| பதில் | : | சரிதான். |

| | | |
|---|---|---|
| | |  |
| கேள்வி | : | உங்கள் ஊரில் அழகர்சாமி என்ற பெயரில் எத்தனை நபர்கள் உள்ளார்கள் என்றால்? |
| பதில் | : | நிறைய நபர்கள் உள்ளார்கள். |
| கேள்வி | : | பி ஷெட்யூல் உங்கள் தந்தை பாகத்திற்கு மேற்கு பக்கம் உள்ளது யார் , யார் சொத்து என்றால்? |
| பதில் | : | ராமசாமி கவுண்டர், அருணாசல கவுண்டர், பி.ராமசாமி கவுண்டர்., அழகர்சாமி கவுண்டர், சின்னதொட்டப்ப கவுண்டர் . |
| கேள்வி | : | மேற்கூறிய நபர்களின் சொத்துக்கள் அனைத்தும் அமைந்துள்ள சர்வே எண் என்ன ? |
| பதில் | : | தெரியவில்லை. |
| கேள்வி | : | உங்கள் தந்தை சொத்திற்கு மேற்கு பக்கம் தாவா சர்வே எண் 393/3 உள்ளது என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | பாகப்பிரிவினையில் உங்கள் தந்தையின் பாகமான 394/1ன் மேற்கு பக்கம் உங்கள் அப்பாவிற்கும் , ஏ செட்யூல் தாரருக்கும் உள்ள சொத்து குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளதா என்றால்? |
| பதில் | : | 393/3 நிலம் காட்டப்பட்டுள்ளது. |
| கேள்வி | : | வாசாஆ1ல் பி செட்யூல் 1வது இலக்க சொத்தின் நான்குமாலில் மேற்கு பக்கம் அவ்வாறு 393/3 என குறிப்பிட்டும் உங்களுடைய தந்தை மற்றும் கெப்பளகவுண்டர் நிலம் என குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளதா என்றால்? |
| பதில் | : | காட்டப்படவில்லை. |
| கேள்வி | : | மேற்கு மாலில் அழகர்சாமி கவுண்டர் நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது இந்த வழக்கில் கூறப்படும் பாக்கியம் மகன் அழகர்சாமியை குறிக்கும் என்றால்? |
| பதில் | : | சங்கரலிங்க கவுண்டர் மகன் அழகர்சாமி அவர் இல்லை. அழகர்சாமி கவுண்டர் என்பது வேறு யாரோ. |
| கேள்வி | : | உங்களுடைய பக்கத்து நிலத்தின் உரிமையாளர் அழகர்சாமி யார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால்? |
| பதில் | : | தெரியாது. |
| கேள்வி | : | பாக்கியம் மகன் அழகர்சாமி அந்த அழகர்சாமி என்று தெரிந்து கொண்டே பொய்யாகவும், உண்மைக்கு மாறாகவும் சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | பி செட்யூல் 1 முதல் 15 இலக்க சொத்துக்கள் உங்களுடைய அனுபவத்தில் உள்ளதா அல்லது விற்று விற்றீர்களா என்றால் ? |

| | | .5. |
|---|---|---|
| பதில் | : | 1 முதல் 15 இலக்க சொத்துக்களை விற்பனை செய்து விட்டேன். தாவா சொத்தை மட்டும் விற்பனை செய்யவில்லை. |
| கேள்வி | : | 394/1 யை விற்பனை செய்த விற்பனை ஆவணங்களில் மேற்கு நான்கு மாலாக உங்களுக்கு பாத்தியமான தாவா சொத்து என்ற விபரத்தை காட்டியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | : | ஞாபகமில்லை. |
| கேள்வி | : | அந்த ஆவணங்களில் சான்று நகல்களை எடுத்து தாக்கல் செய்ய முடியுமா என்றால் ? |
| பதில் | : | தேவை என்றால் தாக்கல் செய்வேன். |
| கேள்வி | : | தாவா சொத்து உங்களுக்கு பாத்தியமானது என மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதன் மூலம் இலகுவாக நிரூபணம் செய்ய இயலும் என்றால் சரியா, தவறா? |
| பதில் | : | மேற்கூறிய விற்பனை செய்த சொத்தின் ஆவணங்கள் இல்லாமலேயே என்னால் நிரூபிக்க முடியும். |
| கேள்வி | : | நீங்கள் விற்பனை செய்த ஆவணங்களில் மேற்கு நான்கு மாலில் தாவா சொத்து உங்களுக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் காட்டப்படவில்லை என்றால், தாவா சொத்தில் உங்களுக்கு உரிமை ஏதும் இல்லை என்றால் ? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | உங்களுடைய கிராமத்தில் நில மேம்பாட்டு திட்டத்தின் அடிப்படையில் எந்த வருடம் பட்டா வழங்கபட்டது ? |
| பதில் | : | எனக்கு தெரியாது. |
| கேள்வி | : | உங்களுடைய கிராமத்தில் செட்டில்மெண்ட் பட்டா எந்த வருடம் வழங்கபட்டது என்று உங்களுக்கு தெரியுமா என்றால்? |
| பதில் | : | 1980 ற்கு முன்னால். |
| கேள்வி | : | ஜமீன் ஒழிப்பு எந்த வருடம் என்றால்? |
| பதில் | : | ஞாபகமில்லை. |
| கேள்வி | : | ஜமீன் ஒழிப்பு அடிப்படையில் உங்கள் குடும்ப சொத்திற்கு எந்த வருடம் பட்டா கிடைத்தது என்றால்? |
| பதில் | : | 1980 ற்கு முன்னால். |
| கேள்வி | : | 1980 ற்கு முன்னால் என்பது 1960 ல் இருந்து 1980 வரைக்கும் என்றால்? |
| பதில் | : | தெரியாது. |
| கேள்வி | : | நில மேம்பாட்டு திட்டத்திற்கு முன்னே தாவா சொத்து பாக்கியம் மகன் அழகர்சாமி பெயரில் பட்டா ஏற்பட்டது என்று சொன்னால்? |
| பதில் | : | சரியல்ல. |

| | | |
|---|---|---|
| | |  |
| கேள்வி | : | பாக்கியம் மகன் அழகர்சாமி பெயரில் 1975ம் ஆண்டு பசலிலே தாவா சொத்திற்கு பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டிருந்தது என்றால் ? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | உங்களுடைய வாசாஆ1 ல் தொட்டப்பகவுண்டர் மகள் பாக்கியம் என்பவரோ , பாண்டியன் என்ற மாரிமுத்து மனைவி செல்லம்மாள் என்பவரோ ஒரு தரப்பினர் என்றால்? |
| பதில் | : | இல்லை. |
| கேள்வி | : | வாசாஆ1 ல் மேற்படி செல்லம்மாளும் , பாக்கியமும் ஒரு தரப்பினராக இல்லாத நிலையில் அந்த பாகப்பிரிவினை ஆவணம் அவர்கள் உரிமையினை கட்டுப்படுத்தாது என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | பாக்கியம் மகன் அழகர்சாமி உங்கள் கிராமத்தின் பஞ்சாயத்து தலைவராக இருந்தாரா என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | வாசாஆ1ல் பாக்கியம் மகன் அழகர்சாமி என்பவர் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார் என்று கூறப்படுவது சரியல்ல என்றால்? |
| பதில் | : | பாக்கியம் மகன் அழகர்சாமி என்பவர் வாசாஆ1ல் சாட்சியம் கையொப்பம் போட்டுள்ளார். |
| கேள்வி | : | சர்வே எண் 394/1ல் மேற்கு மாலில் கூறப்படும் அழகர்சாமி கவுண்டர் என்பது மேற்படி பாக்கியம் மகன் அழகர்சாமியை குறிக்கும் என்றால்? |
| பதில் | | சரியல்ல. |
| கேள்வி | : | வாசாஆ1ற்கு முன்பே தாவா சொத்து பாக்கியத்திற்கு கொடுக்கபட்டு அவரது மகனான அழகர்சாமிக்கு பட்டா பெயர் மாற்றம் ஏற்பட்டு அவர் பாத்தியத்தில் வைத்து அனுபவித்து வந்தார் என்று சொன்னால்? |
| பதில் | | சரியல்ல. |
| கேள்வி | : | தாவா சொத்து அழகர்சாமி கவுண்டர் பாகமாக ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளதால் தான் தாவா சொத்து வாசாஆ1ல் குறிப்பிடப்படவில்லை என்றால் ? |
| பதில் | | சரியல்ல. |
| கேள்வி | : | பொது குடும்ப கடன்களை செலுத்தியதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால்? |
| பதில் | | இல்லை. |
| கேள்வி | : | உங்களுடைய தந்தை ஆசிரியராக பணிபுரிந்துள்ளார் என்றால்? |
| பதில் | | சரிதான். |

| | | .7. |
|---|---|---|
| கேள்வி | : | உங்களுடைய தந்தை எந்த வருடம் காலமானார் ? |
| பதில் | | 2007 ம் ஆண்டு காலமானார். |

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 26.03.2024 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2024.03.27 10:33:48 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
26.03.2024.